எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் – குறள்.

எண்ணினவர் அவற்றைச் செய்து முடிக்கும் உள்ள உறுதியை உடையவராகப் பெறுவாராயின் தாம் எண்ணியவற்றை எண்ணியபடியே பெறுவர்.

உள்ளத்தின் உறுதியும், தன்னம்பிக்கை மட்டுமே ஒருவரது வாழ்க்கை உயர உதவிடும் என்பது உண்மை. இது, தொழில் முனைவோருக்கு மிகவும் அவசியமானது. தன்னம்பிக்கை, விடாமுயற்சி தொழில் முனைவோரை உச்சிக்கு கொண்டு செல்லும். இதை இழந்தவர்கள் உச்சியினை அண்ணாந்து பார்க்க முடியுமே தவிர சென்றடைய இயலாது. நம் நாட்டில் தொழில் துறையில் வளர்ச்சி தற்போது மிக நன்றாய் உயர்ந்து வருகின்றது. புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. தொழில் சார்ந்த புதிய படிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இவையெல்லாம் வருங்கால சந்ததியினரை குறிவைத்து அமலாக்கம் செய்யப்படுகின்றன. தற்சமயம் நமது தொழில்முனைவோர் களுக்கு சேவை செய்ய மத்திய/ மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் அளிக்கின்றன. இத்தகைய சலுகைகளும், மானியங்களும் இத்துறையில் நன்கு ஊறிய தொழில் முனைவோர்களுக்கு மட்டுமே பயன்படக்கூடியதாக இருக்கின்றது. காரணம் புதிய தொழில் முனைவோர்கள் அரசின் சலுகைகள் பற்றி அதிகம் அக்கறை காட்டாமலும், அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யாமலும் இருக்கின்றனர். இத்தகைய தொழில்முனைவோர்கள் முதல் கட்டத்திலிருந்து இரண்டாம் கட்ட வளர்ச்சிக்கு செல்லும்போது பிரச்சனைகளில் சிக்கி முன்னேற இயலாமல் முடங்கி விடுகின்றனர். பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கும், தன்னம்பிக்கையை வளர்த்து



# தொழில் முனைவோர் மன்றம் (THE ENTREPRENEURS CLUB) SME - நிறுவனங்களின் கலங்கரை விளக்கம்...!

– நிறுவனர்கள்

திரு. B. சீனிவாஸ், திரு. K. கங்காதரன், திரு. R.R. பத்மநாபன்

கொள்வதற்கும், முயற்சி செய்யாமலும், சரியான திட்டவரைவு இன்றி தொழிலை தொடங்கி தோல்வியை தழுவி, கடனாளியாகி விடுகின்றனர்.

இப்படி கடனாளியாகும் தொழில் முனைவோர்கள் அனைவரிடமும் ஒரு பொதுவான காரணத்தை காண முடியும். இதில் முதலாவதாக தொழிலைப் பற்றிய அறிவை வளர்த்து கொள்ளாமல் இருப்பது, இரண்டாவதாக அரசு வழங்கும் மானியங்கள் பற்றி அறிந்து கொள்ளாமல் இருப்பது, மூன்றாவதாக சந்தையறிவு இல்லாதவராக இருப்பது, நான்காவதாக கம்யூனிகேஷன் ஸ்கில் இல்லாதவராக இருப்பது போன்றவைகள் கடனாளியாகும் அனைவரிடமும் உள்ள குறைபாடுகளே. இவற்றினை களைய முயற்சிகள் எடுக்காமல் இருப்பதும் இவர்களின் தோல்விக்கு அடிப்படை காரணங்களாய் அமைந்துவிடுகின்றன.

இத்தகைய தொழில் முனைவோர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், பிரச்சனைகளில் சிக்கி, தத்தளித்து நிற்கும் சிறுதொழில் நிறுவனங்களை வழிகாட்டி, மீளவைத்து மீண்டும் அவர்களை உச்சத்திற்கு அனுப்ப உதவும் ஒரு புதிய அமைப்பாக இந்தியாவிலேயே முதன் முறையாக தொழில் முனைவோர் மன்றம் (Entreprenuers Club) தொடங்கப்பட்டிருக்கிறது. இதனை தொடங்கிய மும்மூர்த்திகளும் SME தொழில் நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் தான். இந்த தொழில் தொடங்கி, பிரச்சனைகளை எதிர்கொண்டு, தட்டுத்தடுமாறி இன்று நல்ல நிலையில் உள்ளனர். இந்த மூவருக்கும் கிடைத்த கசப்பான பல அனுபவங்கள் இனிவரும் தொழில் முனைவோர்கள் சந்திக்கக் கூடாது என்பதற்காகவும், தொழில் முனைவோர்கள் வெற்றிபெறுவதற்கு தேவையான அடிப்படை விஷயங்களை பயிற்சி வகுப்புகள் மூலம் அளித்து, அத்துறை சார்ந்த வல்லுனர்களைக் கொண்டு அவர்களின் பிரச்சனைகளை அலசி, ஆராய்ந்து நல்லதொரு வழியை உருவாக்கி தரும் நம்பிக்கை நிறுவனமாகவும், இலாப நோக்கம் இல்லாத அமைப்பாகவும் உருவாகியுள்ளது.

தொடங்கப்பட்ட மிகக் குறைந்த காலத்திலேயே இந்த அமைப்பு (தொழில் முனைவோர் மன்றம்) தொழில் முனைவோருக்கு பயன்படும் நல்ல பல கலந்தாய்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. இதனால் தொழில் முனைவோர் பலர் வங்கி நிதியுதவி, நிர்வாகம், வெளிநாட்டு வர்த்தகம், புராஜக்ட் ரிப்போர்ட்டுகள் போன்ற விஷயங்களில் தெளிவு பெற்று பயனடைந்து வருகின்றனர். இப்படி ஒரு சமூக சிந்தனையுள்ள, லாப நோக்கம் இல்லாத அமைப்பை உருவாக்கிய அறங்காவலர்கள் திரு. R.R. பத்மநாபன், திரு. K. கங்காதரன், திரு. B. சீனிவாஸ். இம்மும்மூர்த்திகளும் பல்வேறு தொழில்களில் முறையே 20 வருட அனுபவங்களைப் பெற்று அதாவது 60 வருட உழைப்பினைக் கொண்டு தொழில் முனைவோர் மன்றத்தினை உருவாக்கியுள்ளனர். இதை அறிந்து இம்மன்றத்தின் பணிகள், நோக்கம், செயல்பாடுகள், எதிர்கால திட்டங்கள் போன்றவற்றை அறியும் பொருட்டு "மும்மூர்த்திகளையும்" ஒருங்கிணைத்து கேள்விக் கணைகளைத் தொடுத்தோம், அதற்கு அவர்கள் அளித்த பதில்கள்...

**தொழில் முனைவோர் மன்றம் ஏன் தொடங்கப்பட்டது?**

தொழில் முனைவோருக்காக தனியாக ஒரு அமைப்பின் மூலம் அவர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், அவர்களுக்கு வழி காட்டுவதற்கும், அவர்களின் பலத்தை அவர்கள் அறிந்து கொள்ள வழி செய்ய வேண்டும் என்கிற அடிப்படை எண்ணத்தில்தான் தொழில் முனைவோர் மன்றம் உருவானது.

நம் நாட்டில் தொழில் முனைவோர், தொழில் முனைவோராக இருப்பதினாலேயே பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் வளர்ச்சியை நோக்கிய அவர்களது பயணம் தடைப்படுகின்றது. தினம், தினம் தொழில் முனைவோர் எதிர்நோக்கும் சங்கடங்கள் என்று எடுத்துக் கொண்டால் இதில் முக்கியமாக நிதிப்பற்றாக்குறை, தொழிலாளர்கள் பிரச்சனை, மற்றும் சந்தைப்படுத்தல் தான். இவற்றினைக் களைய தொழில் முனைவோர் மன்றம் தன்னுடைய முழு முயற்சியையும் மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

சிறு தொழில் முனைவோர்கள் ஓரளவுக்கு வளர்ந்த பின், அதிக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். இவர்களிடம் பணம் இருந்தாலும் செயல்படுத்த முடியுமா (Execution) என்கிற கேள்வியே இவர்களின் வளர்ச்சியை தடுக்கின்றது. இந்தியாவில், தொழில் முனைவோர் மட்டும் தான் வளர்ச்சிக்கான முக்கிய காரணிகள். இவர்கள் தான் நாட்டில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றனர். நாடு முன்னேற்றமடைய சிறுதொழில் துறையினரின் வளர்ச்சி இன்றியமையாததாகும். வளர்ந்து வரும் இந்தியா மற்றும் சைனா போன்றவைகளே விரைவில் உலகின் மிகப்பெரிய பொருளாதார சமுதாயமாக இருக்கப்போகின்றன. இதற்காக நாம் இப்போதிருந்தே நமது SME நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இந்தியாவில் மொத்த உற்பத்தியில் (GDP) சிறுதொழில்களின் பங்கு 55 சதவீதங்களாகும். இதில்

> **சட்டுபிட்டு தகவல்**
>
> உறுதியற்ற, குழப்பமான மனிதர்கள் ஒரு காரியத்துக்கும் உதவாதவர்கள்

35 சதவீதம் நேரிடையாகவும் 20 சதவீதம் மறைமுகமாகவும், அதாவது சிறுதொழில் நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களுக்கு செய்து கொடுக்கும் பணிகளுக்கானதாகும்.

குறிப்பாக, தென்இந்தியாவில் தொழில் முனைவு என்பது சிறிது, சிறிதாக குறைந்து கொண்டே வருகின்றது. காரணம் இங்கு சேவைத் தொழில்களின் வளர்ச்சியினால் பணியிலிருப் போருக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகின்றது. மேலும் படித்த இளைஞர்கள் பலர் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்றனர். இவர்கள் தொழில் முனைவோராக முயற்சிகளை கூட மேற்கொள்வதில்லை என்கிற காரணத்தினால் தொழில் முனைவோர் மன்றம் பொறியியல் கல்லூரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அங்குள்ள மாணவர்களுக்கு “தொழில் முனைவு” ஏன் அவசியமானது என்பது பற்றி எடுத்துரைக் கின்றோம். இதற்காக மத்திய அரசு (AICTE) பல உதவிகளை மாணவர்களுக்கு வழங்குகின்றது. இதை மாணவர்கள் சரியாக பயன்படுத்திடவும் நாங்கள் துணைபுரிகின்றோம்.

நன்கு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம் நம் நாட்டில் நன்கு வளர்ந்து வருகின்றது. ஆனால்அதிகம் படிக்காதவர்கள், கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்கு சிறு தொழில் துறைதான் வேலை வாய்ப்பை அளிக்கின்றது. இந்தியாவில் 90 சதவீத வேலை வாய்ப்பு சிறுதொழில் துறையினரிடம் தான் உள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிந்துள்ளோம்.

இதற்காகத் தான் சிறுதொழில் துறையினரின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து, SME நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்காக கவன்சிலிங் செய்து, அவர்கள் தொழிலில் வெற்றியடையவும், அவர்கள் குடும்ப வாழ்வில் ஏற்றம் பெற்று, மன மகிழ்ச்சி அடையத் தேவையான வழிவகைகளை நாங்கள் ஆராய்ந்து அதை தீவிரமாக செயல்படுத்துகின்றோம்.

எந்த தொழில் முனைவோருக்கும் முதல் ஐந்தாண்டுகள் கற்றுக் கொள்வதற்கும் (Learning) அதற்குப் பிறகு வரக்கூடிய ஆண்டுகள் தான் வருவாயை பெருக்கிக் (Earning) கொள்வதற்கும் வழி வகுக்கும் என்பதையும், செலவினங்களை குறைத்தால் தான் மூலதன வளர்ச்சிக்கு வித்திட முடியும் என்பதையும் தெளிவாக எடுத்துரைக் கின்றோம்.

இதற்காக நாங்கள், தொழில் முனைவோர் மற்றும் எதிர்கால தொழில் முனைவோர்களுக்கு தேவையான உதவிகளை மூன்று வழிகளில் வழங்குகின்றோம்.



- சிறு, குறுந்தொழில்களை மேன்மைப்படுத்தல் (Elevation)
- தொழில் முனைய முயற்சிக்கும் தனி நபர்களுக்கு வழிகாட்டுதல்
- கல்வித்துறைக்கும், தொழில் துறைக்கும் பாலம் அமைத்தல் என்பதாகும்.

மேலும் SME நிறுவனங்கள் வளர்ச்சிக்கு தேவையான வணிக ஆய்வு சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், நேரிடை விளக்கங்கள், போன்றவற்றினை அந்தந்த துறை வல்லுனர்கள் மூலம் சிறுதொழில் முனைவோர்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது என்ற மிகச்சிறப்பான வழிகளில் பணியாற்றுகின்றோம் என்கின்றனர்.

**தொழில்முனைவோர் மன்றம், தொழில் முனைவோருக்கு எம்மாதிரியான உதவிகளைச் செய்யும்?**

எங்களுடைய மன்றத்தின் முக்கிய நோக்கமே தொழில் முனைவோருக்கும், வல்லுனர்களுக்கும் இடையே உள்ள மிகப்பெரிய இடைவெளியை நிரப்புவதுதான். தொழில் முனைவோர்களுக்குத் தேவையான நிதியுதவி, சந்தைப்படுத்தல், மனிதவளம், தரம், உற்பத்தி, தரக்கட்டுப்பாடு சான்றிதழ்கள், ஏற்றுமதி/இறக்குமதி மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிப்பில் தொழில் முனைவோர் மன்றம் மிகப்பயனுள்ள சேவையைச் செய்யும்.

தொழில் முனைவோர் மன்றத்திடம் பல்வேறு துறை சம்பந்தப்பட்ட வல்லுனர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் மிகவும் நம்பிக்கைக்கு உரியவர்கள்.



இவர்களைக் கொண்டு தேவையான திட்ட அறிக்கைகள் மற்றும் அனைத்து உதவிகளும் செய்து கொடுக்க முடியும். இதனால் அவர்களது நேரம், உழைப்பு மிச்சப்படும்.

மேலும் எங்களுடைய கூட்டங்களில் கலந்து கொள்ளும் தொழில் முனைவோருக்கு (உறுப்பினர்களுக்கு) செவிப்பசி, அறிவுப்பசி, வயிற்றுப் பசி ஆகிய மூன்றுக்கும் முன்னுரிமை தரப்படுகின்றது தொழில்முனைவோர் மன்றத்தின் கலந்தாய்வு கூட்டங்கள் அனைத்தும் மிகச் சிறந்த வசதி கொண்ட ஹால்களில் நடத்தப்படுகின்றன. இங்கு ரம்மியமான சூழ்நிலையும், நல்ல கார்பார்க்கிங் வசதியும் இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றோம். இதற்காக நாங்கள் எங்களுடைய உறுப்பினர்களிடமிருந்து எவ்விதமான கட்டணங்களையும் பெறுவது கிடையாது. எங்களது உறுப்பினர்களுக்கு இணைய வழி மூலம் வியாபரத்தை பெருக்குவதற்கு முக்கியத்துவம் தரப்படும். இதற்கான வழி வகைகளை அடையாளம் கண்டுள்ளோம்.

சமீபத்தில் நாங்கள் SME நிறுவனங்களுக்கு இன்சூரன்ஸின் அவசியம் பற்றியும், ரெப்போ ஃபைனான்ஸ் பார் SME'S – என்பதின் கீழ் ரெப்போ வங்கி SME நிறுவனங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பற்றி எங்களுடைய கூட்டத்தில் விளக்கினோம். இதனால் இந்த கட்டத்தில் கலந்து கொண்ட நிறைய உறுப்பினர்கள் பயன் அடைந்தனர். உறுப்பினர்கள் தங்கள் சந்தேகங்களை வங்கியாளர்களிடமே நேரிடையாக கேட்டுத் தெரிந்து கொண்டனர். இதைப்போன்ற கூட்டங்கள் தொழில் முனைவோரின் நம்பிக்கையையும், உறுதியையும் வளர்க்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

மேலும் எங்களுடைய உறுப்பினர்களுக்கு, பணத்தை அதிகமாக செலவழிக்காமல் தொழிலை எப்படி நடத்துவது, தொழில் முனைவோர் அன்றாட வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றோம்.

நாங்கள் முன்பே கூறியபடி, தொழில் முனைவோருக்கு முதல் 5 ஆண்டுகள் கற்றுக் கொள்ளும் ஆண்டுகளாகவும் (Learning) அடுத்து வரக்கூடிய ஆண்டுகள் வருமானம் ஈட்டக் கூடியதாகவும் (Earning) இருக்கும் என்று கூறுகின்றோம். இதன்படி முதல் ஐந்து ஆண்டுகளில் தொழில்முனைவோர் எப்படியெல்லாம் பணத்தை சேமிக்க வேண்டும் அதிக சேதாரம் இல்லாமல் எப்படி தயாரிப்புகளை உருவாக்குவது, நேர மேலாண்மை மற்றும் திட்டங்களை எப்படி வெற்றிகரமாக செய்து முடிப்பது என்பதைப் பற்றி உறுப்பினர்களுக்கு விளக்குகின்றோம்.

எங்களது கூட்டங்களில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களிடையே கலந்தாய்வு நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது. இதனால் அவர்களிடையே நல்ல உறவு ஏற்படுத்தப்பட்டு வணிக ரீதியில் பயன்பட வழி செய்யப்படுகின்றது.

தொழில் முனைவோர் மன்றம் என்பது 100 சதவீதம் சேவையின் அடிப்படையில் உருவாக்கப் பட்டது. எனவே எங்களுடைய கூட்டங்களில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களிடம் நாங்கள் கட்டணங்களை பெறுவது கிடையாது.

நாங்கள் மூவரும் சிரமப்பட்டு கடந்து வந்த பாதையில், தற்போது கடக்க இயலாமல் தவிக்கும் தொழில் முனைவோர்களுக்கு கை கொடுத்து உதவ வேண்டும் என்பதே எங்கள் தொழில் முனைவோர் மன்றத்தின் அடிப்படை நோக்கமாகும் என்கின்றனர்.

வருங்கால தமிழக தொழில் வளர்ச்சிக்கு சில ஆலோசனைகள்...

தமிழகத்தில் வருங்கால தொழில் வளர்ச்சி என்பது இன்ஜீனியரிங் மற்றும் எம்.பி.ஏ. படிப்புகளை அடிப்படையாகக் கொண்டே முடிவெடுக்கப்படும். தற்போது தமிழகத்தில் அதிகளவு தொழில் முனைவோர் உருவாவது இல்லை என்று கருத்து நிலவுகின்றது. இது உண்மைதான்! காரணம் MBA–வைப் படிக்கும்போதே கேம்பஸ் இன்டர்வியூ என்று கூறி அந்த மாணவர்களை தொழில் முனைவோராக மாற்றாமல் படிக்கும்போதே வேலைக்கு உத்திரவாதம் அளித்து விடுகின்றன கல்லூரிகள். இதனால் MBA படிக்கும் மாணாக்கர்களுக்கும் சமூகத்தின் மீதான அக்கறை குறைந்து வருகிறது. MBA படிப்பு என்பது தொழில் வளர்ச்சிக்கான படிப்பாகும். இரண்டு வருடங்கள் தொழில் சார்ந்த படிப்பை முடித்து விட்டு வேறு ஒரு நிறுவனத்தில் பணியில் அமர்ந்துவிடும் போது தொழிலை யார் தொடங்குவார்கள். எப்படி தொழில் முனைவோர் உருவாகுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு தொழில்முனைவோர் மன்றம் MBA படிக்கும் மாணவர்களுக்கு தொழில் முனைவு ஏன் அவசியமானது என்பதை கொண்டு போய்ச் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அரசாங்கமும் MBA மற்றும் இன்ஜீனியரிங் மாணவர்களுக்கு பல வகைகளில் உதவி

சட்டுபிட்டு தகவல்

திட்டமிடாத செயல்
யாவும் நஷ்டமே

செய்கின்றது. வங்கிகளும் நல்ல திட்ட அறிக்கை இருந்தால் மனமுவந்து கடன் வழங்க தயாராக இருக்கின்றன.

நமது நாட்டில் பொதுவாக தொழிற்கல்வி திட்டத்தில் கல்வி நிலையங்கள் முதலாளிகளை தயாரிப்பதற்கு பதிலாக வேலைக்காரர்களை தயார் செய்கிறது. தொழிற்கல்வியை தொழில் தொடங்குவற்கு உதவியாக சீரமைத்து குறிப்பாக சிறுதொழில், நடுத்தர தொழில் இவைகளை தொடங்க விதிமுறைகள் உண்டாக்க வேண்டும். தொழிற் கல்வியைப் போல் “தொழில் முனைவோர் கல்வியை”யை பாடத்திட்டமாக்க வேண்டும்.

நாம் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் அம்பானி, பிரேம்ஜி, நாராயணமூர்த்தி என்று பேசிக் கொண்டிருப்பது! அடுத்த தலைமுறை உருவாக்கம் என்பது மிகவும் அவசியம். ஆனால் இதில் பரிதாபம் என்னவென்றால் முதலாளியாக வேண்டியவர்கள் எல்லாம் தொழிலாளியாக தங்கள் வாழ்க்கையை நடத்த விருப்பப்படுகின்றனர் என்பது மிக வேதனையான விஷயமாகும்.

இந்நிலை மாறவேண்டும் என்பதற்காக, தொழில் முனைவோர் மன்றம் மாணவர்களை தொழில் செய்ய வருமாறு அறிவுறுத்தி வித்தினை விதைக்கும் பணியை செய்து வருகின்றது. இது நிச்சயம் மிகப்பெறும் மாற்றத்தினை தரும் என்ற நம்பிக்கை எங்களுக்குள்ளது என்கின்றனர்.

தமிழகத்தில் தற்போது **SME** நிறுவனங்களின் நிலை பற்றி...

முன்பு தமிழகத்தில் டிவிஎஸ், முருகப்பா மற்றும் அசோக் லேலண்டு போன்ற சில பெரிய நிறுவனங்களே இருந்தன. இவர்களைச் சுற்றியே SME நிறுவனங்களின் வளர்ச்சி இருந்தது. இந்த பெரிய நிறுவனங்களிடமிருந்து Sub-Contract பெற்று SME நிறுவனங்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து வந்தன. ஆனால் தற்போது நிலைமை தலைகீழாகி விட்டது. காரணம், தமிழகத்தில் பல பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புகளை உற்பத்தி செய்கின்ற நிலை உருவாகியுள்ளது. உதாரணமாக ஃபோர்டு, ஹூண்டாய், கார் நிறுவனங்கள் மற்றும் நோக்கியா போன்ற சர்வதேச நிறுவனங்களின் தொழிற்கூடங்கள் தமிழகத்தில் அதிகரித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் இவர்களுக்கென தனித்தனி செயல்பாடுகளை கொண்டுள்ளன. ஆனால் இவைகள் அனைத்திலும் தரக்கட்டுப்பாடு மிகச் சிறப்பாக கையாளப்படுகின்றன. சப் காண்ட்ராக்ட் எடுக்கும் SME நிறுவனங்கள், தங்களின் தரம், சீரான வடிவமைப்பு, அதிக உற்பத்தி போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தும் போது நிறைய ஆர்டர்கள் வரும் வாய்ப்புள்ளது. எனவே SME நிறுவனங்கள் நவீன எந்திரங்களைக் கொண்டும், நேரமேலாண்மை, தரமேலாண்மை போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தி, பணியாளர்களுக்கான ஊதியத்தை சரியான நேரத்தில் வழங்கி தொழிலை சீரான முறையில் நடத்திட முயற்சிக்க வேண்டும்.

தற்போது நாம் இரட்டை இலக்கு GDP வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டுள்ளோம். SME நிறுவனங்களின் வளர்சிக்கு இதுவே சரியான காலம். இதை சரியாக பயன்படுத்திட வேண்டும். சிறுதொழில் நிறுவனங்கள் தான் நாட்டின் முதுகெலும்பானவைகள். எனவே சிறு தொழிலில் ஈடுபட்டுள்ளோர் நம்பிக்கை இழக்காமல், முயற்சிகளை அதிகரித்து கொண்டே இருக்க வேண்டும்.

தொழிலில் ஏற்றம், இறக்கம் என்பது பொதுவானது தான். அதற்காக தன்னம்பிக்கையை ‘கை’ விடக்கூடாது. மனம் தளர்ந்து போகும் சமயத்தில் ‘சிறு தொழில் மன்றத்தை’ தொழில் முனைவோர் அணுகி தங்களை ரீசார்ஜ் செய்து கொள்ள வேண்டும்.

நாங்களும் தொழில் முனைவோருக்கு ஏற்படும் சங்கடங்களை தீர்த்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைவோம் என்கின்றனர்.

சிறு தொழில் துறையினர் தயாரிக்கும் தயாரிப்புகள் பற்றி...

தமிழ்நாட்டு சிறுதொழில் துறையினரிடம் நல்ல உஷ்ணம் உள்ளது. அதை சரியான நேரத்தில் வெளிக் கொண்டு வரவேண்டும். ஏன்? எனில்! நம்மிடம் இயற்கையாக கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சிறப்பான தயாரிப்புகளை உருவாக்கலாம். உதாரணத்திற்கு நம் ஊர் ‘அவலை’ எடுத்துக் கொள்வோம். எத்தனை விதமான சத்துக்கள் கொண்டது. ஆனால் இதை சரியானபடி தயாரித்து, பேக் செய்து சந்தையில் விட யாருக்கும் ஆர்வமில்லை. சாதாரணமாக கிடைக்கும் சோளத்தை ‘Kellogs’ என்ற பிராண்ட் பெயரில் பெரிய கடைகளில் விற்கும் பொருட்களை வாங்க ஆட்கள் தயாராக உள்ளனர்.

நம்மூர் பெட்டி கடைகளில் விற்கும் பர்பியை தமிழக நிறுவனம் ஒன்று மிக அழகிய பேக் செய்து, சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தயாரித்து சந்தைப்படுத்துகின்றது. இந்த பர்பி பாக்கெட்டை நாங்கள் தொழில் சுற்றுலாவுக்கு சிங்கப்பூர் சென்றிருந்தபோது வாங்கி சாப்பிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்து தயாரிப்பாளர் யார் என்று பார்த்தபோது மிக ஆச்சரியம் அடைந்தோம். காரணம் அந்த பர்பியை தயாரிப்பது நம்மூர் தாம்பரத்தைச் சேர்ந்த நிறுவனம்.

இதைத் தான் நாங்கள் புதுமை என்கிறோம். இதைப்போன்ற நம்நாட்டு இயற்கையான உணவுப் பொருட்கள் உலகளவில் வர வேண்டும். குறிப்பாக தூத்துக்குடியில் மிகவும் பிரபலமான மக்கின்ஸ், திருநெல்வேலியின் அடையாளமான அல்வா, போன்ற பொருட்கள் உலகத்தரத்திற்கு இணையாக வரவேண்டும்.

இதற்காக நம் SME நிறுவனங்கள் வித்தியாசமான பொருட்களை உருவாக்க வேண்டும். அப்பொருள்களுக்கு அழகிய பேக்கிங் மிகவும் அவசியம். அதே நேரத்தில் தரமும் சரியாக கையாளப்பட வேண்டும். மேலும் முக்கியமாக நல்ல திட்ட அறிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும். நல்ல திட்ட அறிக்கை ஒரு தொழிலை தொடங்குவதற்குச் சமமானது. இந்த விஷயத்தில் தொழில் முனைவோர் மன்றம் தொழில் முனைவோருக்கு சிறந்த திட்ட அறிக்கைகளை அத்துறை சார்ந்த வல்லுனர்களின் உதவியுடன் தயாரித்து கொடுக்கும். இதனால் தொழில் முனைவோரின் தோளில் உள்ள சுமையின் அளவு குறைக்கப்படும் என்கின்றனர்.

தமிழக தொழில் வளர்ச்சி பற்றி தங்களின் கருத்து...

தற்போது தமிழகத்தில் இன்ஜூனியரிங் தொழில்கள், தோல் பொருட்கள் உற்பத்தி, கார்மெண்ட் தொழில்கள், நிட்டட் தொழில்கள் மற்றும் டெக்ஸ்டைல்சுடன் விவசாயம் சார்ந்த தயாரிப்பு (Agro based) தொழில்கள் நன்றாக வளர்ச்சியடைந்து அதிக வேலை வாய்ப்பையும் உருவாக்கி வருகின்றன. உதாரணத்திற்கு கூறவேண்டுமென்றால் உலகின் எந்தப் பகுதியிலும் இயக்கப்படும் கார்கள் அல்லது கனரக வாகனங்களை பரிசோதித்துப் பார்த்தால் அதில் நிச்சயமாக ஒரு உதிரிபாகமாவது Made in India என்றிருக்கும். அந்த உதிரிபாகம் நிச்சயம் சென்னையில் உள்ள ஒரு நிறுவனத்தின் தயாரிப்பாகவே இருக்கும்.

தமிழகம் ஆட்டோமொபைல் உற்பத்தியில் ஆசியாவின் "டெட்ராய்டு" என பெருமையுடன் அழைக்கப்படுகின்றது. இங்கு தொழில்கள் சிறப்பாக நடைபெற அரசின் கொள்கைகள் மிகவும் ஒத்துழைக்கின்றன. மிகவும் இணக்கமான சூழ்நிலை தொழில் துறையினருக்கு தமிழகத்தில் உள்ளது.

மேலும், இந்திய அளவில் உள்கட்டுமானம் எனப்படும் (Infrastructure) சாலைகள், மேம்பாலங்கள், அணைகள் மற்றும் வானூர்தி நிலையங்கள் போன்றவைகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால், இது மற்ற துறைகளையும் வளர்ச்சியடைய வைக்கின்றது.

மேலும், இந்திய ஐடி தொழில் வளர்ச்சிக்கு தமிழகம் மிகப்பெரும் பங்காற்றுகின்றது. இதனால் நகர்ப்புறங்களில் படித்தவர்களுக்கு வேலையில்லை என்ற பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அதிகம் படிக்காத, படிப்பறிவில்லாத, நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு சிறுதொழில் நிறுவனங்கள் தான் வேலைவாய்ப்பளிக்கின்றன. எனவே தமிழகத்தில் உள்ள பல லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தரும் சிறுதொழில்களை வளர்ப்பதும், பாதுகாப்பதும் மிகவும் அவசியம்.

**"வளர்ந்து வரும் இந்தியா மற்றும் சைனா போன்றவைகளே விரைவில் உலகின் மிகப்பெரிய பொருளாதார சமுதாயமாக இருக்கப்போகின்றன. இதற்காக நாம் இப்போதிருந்தே நமது SME நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், ஊக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்."**



திரு. R.R. பத்மநாபன்



தற்போது மக்களிடம் நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. கார்களில் செல்ல வேண்டும் வசதியாக வாழ வேண்டும் என விரும்புகின்றனர். இதற்காக வசதிகளை பெருக்கிக் கொள்ள அதிக உழைப்பும், ஈடுபாடும் மக்களிடம் வளர்ந்துள்ளதே நல்ல வளர்ச்சிக்கு அறிகுறியாகும் என்கின்றனர்.

**நம் SME ஏற்றுமதியாளர்கள் சந்திக்கும் பூதாகரமான பிரச்சனையான ரூபாய் மதிப்பு உயர்வு பற்றி தங்கள் கருத்து....**

உண்மையில் சொல்லப்போனால் கடந்த 3 வருடங்களுக்கு முன்பே டாலர் விலை குறையும் என்பதை இந்தியாவின் டாப்–20 நிறுவனங்கள் ஆய்வின் மூலம் அறிந்து கொண்டன. இதனால் அவர்கள் அனைவரும் தங்களது செயல்பாடுகளை அதிகபட்சமாக ஈரோ டாலர் பக்கம் தங்களது கவனத்தை திசை திருப்பியிருந்தன. இதன் பிரதிபலிப்பு தான் இந்திய சாஃப்ட்வேர் துறையின் மிக முக்கிய நிறுவனங்களான TCS, WIPRO, INFOSYS போன்ற நிறுவனங்களின் லாப வளர்ச்சி விகிதம் ஒவ்வொரு காலாண்டுகளிலும் வளர்ந்து வருகின்ற நிலையை காண இயலுகின்றது. இதற்குப் பெயர் தான் திட்டமிடல் என்பது.

மேலும், ரூபாய் மதிப்பு உயர்வு என்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் மிகவும் மகிழ்ச்சி தரும் சேதி தான். நம் நாட்டில் வாங்கும் சக்தி அதிகப்படுத்தப்பட்டுள்ளது. ரூபாய் மதிப்பு உயர்வினால் பாதிப்பு என்பது குறைந்த காலத்தில் ஏற்படும் 'நெகடிவ்' விஷயம். இதை 'பாஸிடிவ்'வாக மாற்றிக் கொண்டு இந்த பிரச்சனையிலிருந்து வெளிவருவது எப்படி என்பது பற்றி நமது SME நிறுவனங்கள் யோசித்து செயல்பட வேண்டும்.

இப்பிரச்சனையில் இருந்து மீள சில விஷயங்களை உடனடியாக செயல்படுத்தலாம்:

- நிறுவனத்தின் செலவுகளை கட்டுக்குள் வைப்பது
- உற்பத்திக்கு தேவைப்படும் பொருட்கள் ஏதாவது இறக்குமதி செய்ய முடியுமா என்று ஆராய்ந்து பார்த்து இறக்குமதி செய்து கொள்ளலாம். இதனால் தயாரிப்பு அடக்க விலை குறையும்.
- நம்மூர் வங்கிகள் வீட்டுக் கடனை கொடுத்து விட்டு Fixed / Float என பிரித்து வட்டி விகிதங்களைப் பெறுவது போல் ஏற்றுமதியில் பார்வர்ட் கான்ட்ராக்ட்டை (Fixed Rate) பயன்டுத்தி ஏற்றுமதியாளர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம் (குறிப்பிட்ட அளவு லாபம் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்துடன்).
- ஏற்றுமதியின் போது பெறப்படும் பொருளுக் கான விலையை வேற்று நாட்டு கரன்சியில்

**எங்களுடைய மன்றத்தின் முக்கிய நோக்கமே தொழில் முனைவோருக்கும், வல்லுனர்களுக்கும் இடையே உள்ள மிகப்பெரிய இடைவெளியை நிரப்புவதுதான். தொழில் முனைவோர்களுக்குத் தேவையான நிதியுதவி, சந்தைப் படுத்தல், மனிதவளம், தரம், உற்பத்தி, தரக்கட்டுப் பாடு சான்றிதழ்கள், ஏற்றுமதி / இறக்குமதி மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிப்பில் தொழில் முனைவோர் மன்றம் மிகப்பயனுள்ள சேவையைச் செய்யும்.**

நிர்ணயிக்கலாம். உதாரணமாக யூரோ, பிரிட்டிஷ் பவுண்ட் போன்ற கரன்சிகளில் பெற முயற்சிக்கலாம்.

நம் நாட்டு SME நிறுவனங்களைப் பொறுத்தவரை லாபம் வரும் போது அப்பணத்தை வேறு வழியில் திருப்பி விடுவார்கள். அதாவது நகைகள் வாங்குவது, நிலம் வாங்குவது என செலவழித்து விடுவார்கள். இதனால் நிறுவனத்தின் பாதுகாப்புக்காக இருக்க வேண்டிய பணம் இல்லாமல் போய் விடும். இதன் காரணமாக ஏதேனும் பிரச்சனை வரும்போது நிறுவனமே ஆட்டம் கண்டுவிடும். எனவே, லாபம் வரும் போது நிறுவனத்தை பலப்படுத்திட வேண்டும். இதனால் தொழிலாளர் சம்பள பிரச்சனை, மற்றும் தினச் செலவுகளில் இருந்து தங்களை குறிப்பிட்ட காலத்திற்கு தங்களைத் தாங்களே பாதுகாப்பு அளித்துக் கொள்ளலாம்.

எங்களைப் பொறுத்தவரை ரூபாய் மதிப்பு உயர்வு என்பது, நமது நாட்டின் வளர்ச்சியினை அதிகப்படுத்துவதேயாகும். எனவே நம் SME ஏற்றுமதியாளர்கள் பிரச்சனைக்கு என்ன தீர்வு என்பதை ஆராய்ந்து, நடைமுறையில் எளிதாக செயல்படுத்தப்படும் செயல்களை உடனடியாகச் செய்து தங்களையும், சார்ந்துள்ள பணியாளர்களின் குடும்பங்களையும், பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும் என்கின்றனர்.

**தமிழகத்தின் புதிய தொழிற்கொள்கை பெரிய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கிறது என கூறப்படுவதைப் பற்றி...**

ஒரு உண்மையை புரிந்து கொள்ளுங்கள்! தாய், தந்தையைப் போன்றவை பெரிய நிறுவனங்கள், குழந்தைகளைப் போன்றவை சிறுதொழில் நிறுவனங்கள். தாய், தந்தை இல்லாவிட்டால் ஏது பிள்ளைகள். ஏன் இதைக் கூறுகின்றோம் என்றால், சென்னை மிகப் பெரிய ஆட்டோமொபைல் கிளஸ்டராக உள்ளது எப்படி? கார் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ள காரணத்தினால் இவர்களை நம்பி பல SME நிறுவனங்கள் வளர்ச்சி பெற்று இன்று ஆட்டோ கிளஸ்டராக உருவெடுத்துள்ளது. தேவை இருந்தால் தானே தயாரிப்பில் ஈடுபட முடியும்.

எங்களைப் பொறுத்தவரை அரசின் தொழிற் கொள்கை வரவேற்கப்பட வேண்டியது தான். காரணம் இதுநாள் வரை தொழில் நிறுவனங்களுக்கு எந்த Direction–னும் இல்லாமல் இருந்தது. தற்போது அரசு புதிய தொழிற்கொள்கையை அறிமுகப்படுத்தி சரியான பாதையை வகுத்துள்ளது.

இந்த புதிய தொழிற் கொள்கையில் FIEO-வின் பரிந்துறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழகத்தில் SME நிறுவனங்களின் செயல்பாடுகள்.

- மொத்த உற்பத்தி கூடங்களில் 95 சதவீதம் SME நிறுவனங்கள்.
- மொத்த ஏற்றுமதியில் 35 சதவீதம்
- மொத்த உற்பத்தியில் 40 சதவீதம்
- பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த மூலதனம் ரூ. 13515 கோடிகள்
- 35.11 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது.
- பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 5 லட்சம்.

தொழிற்சாலை கட்டுவதற்கு இடங்களை தேர்வு செய்ய (பயிர் செய்யாத இடம்) நிலவள வங்கி (Land Development Bank) உருவாக்கப்பட்டுள்ளது.

பெரிய நிறுவனங்களுக்காக ஒதுக்கப்படும் இடங்களில் 25 சதவீதம் சிறுதொழில் நிறுவனங் களுக்காக ஒதுக்கப்படும் என அரசு உறதியளித் துள்ளது. பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

விரைவில் சிறுதொழில் துறையினருக்காக கொள்கையை வெளியிடுவோம் என அரசு உறுதி செய்துள்ளதையும் நாம், நினைவிற்கொள்ள வேண்டும் என்கின்றனர்.

**தொழில் முனைவோர் மன்றத்தில் உறுப்பினராக என்ன செய்யவேண்டும்?**

எங்களுடைய மன்றம் 100 சதவீதம் சேவையினை அடிப்படையாகக் கொண்டது. இதில் உறுப்பினரா வதற்கு பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றோம். நாங்கள் SME எனும் சமூகத்தை பார்க்கின்றோம். இந்த சமூகம் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றது.

தொழில் முனைவோர் மன்றத்தில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொள்ளலாம். உறுப்பினர்கள் செய்யும் தொழிலில் மேன்மையடையவும், தொழில் நுணுக்கங்கள் மற்றும் வளர்ச்சிக்கான காரணி களை அடையாளம் கண்டு அவற்றினை செயல்படுத்துவது என்கிற நோக்கத்திலே தான் தொழில் முனைவோர் மன்றம் செயல்படுகின்றது.

**சட்டுபிட்டு தகவல்**

ஏமாற்றுகிறவர்களுக்கு எப்போதுமே ஏமாறுகிறவர்கள் கிடைப்பார்கள்

“

**தொழிற்கல்வியை தொழில் தொடங்குவற்கு உதவியாக சீரமைத்து குறிப்பாக சிறுதொழில், நடுத்தர தொழில் இவைகளை தொடங்க விதிமுறைகள் உண்டாக்க வேண்டும். தொழிற் கல்வியைப் போல் “தொழில் முனைவோர் கல்வியை”யை பாடத்திட்டமாக்க வேண்டும்.**

“



திரு. **B.** சீனிவாஸ்

நாங்கள் முன்பே கூறியபடி தொழில் முனைவோரின் செவிக்கும், அறிவுக்கும், உள்ள பசியை தீர்ப்பதே எங்களின் அடிப்படை நோக்கமாகும்.

நிறுவனங்களுக்காக வருட சந்தாவாக:

ரூ.3000/- மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.300/-

கல்விச்சாலைகளுக்காக வருட சந்தாவாக :

ரூ.2000 வருட சந்தாவாகவும், சேர்க்கை கட்டணம் ரூ.200

தனிநபர்கள், மாணவர்களுக்காக வருட சந்தாவாக:

ரூ.1000 மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.100 பெறப்படுகின்றது.

எங்களது உறுப்பினர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தின் அவசியம் பற்றி அறிவுறுத்தப்பட்டு, இணையத்தை சிறப்பாக பயன்படுத்துவது குறித்த நேரிடை விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

உறுப்பினராக விரும்புவோர் எங்களது இணைய தளத்திலும் பதிவு செய்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தியுள்ளோம். எங்களுடைய இணைய தளம் தமிழில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இணைய தள முகவரி: www.tecindia.in என்பதாகும்.

எங்களுடைய கலந்தாய்வு கூட்டங்கள் மாதா மாதம் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் Intecgrate என்ற பெயரில் நடைபெறுகிறது. இதன் மூலம் கண்களும், கண்களும் சந்திப்பு போன்ற நிகழ்வுகள் (eye to eye contact) உறுப்பினர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம் என்கின்றனர்.

**SME நிறுவன வளர்ச்சிக்கு மிக அவசியமானது எது?**

SME நிறுவன வளர்ச்சி என்பது அதை நடத்தும் தனிநபரின் தன்னம்பிக்கையில் தான் உள்ளது. தன்னம்பிக்கையை இழக்காமல் இருக்கும் தொழில் முனைவோருக்கு மற்றவை அனைத்தும் தானாக வந்து சேரும் என்பதே உண்மை. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதில் தொழில் முனைவோர் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். தொழில் முனைவோர் மன்றத்தில் உறுப்பினராக உள்ள அனைவருக்கும் நாங்கள் முதலில் அளிப்பது தன்னம்பிக்கை என்னும் மூன்றாவது கையைத்தான். இக்கையின் மூலம் பல சாதனைகளை நிகழ்ந்த முடியும் என்பது எங்களின் அனுபவமாக உள்ளது என்கின்றனர்.

**தொழில் முனைவோர் மன்றம் தன்னுடைய உறுப்பினர் களின் நிதி தேவையை பூர்த்தி செய்ய உதவுமா?**

நிச்சயமாக! தற்போது நாங்கள் ரெப்போ வங்கியின் துணை நிறுவனமான ரெப்கோ MSME ஃபைனான்ஸ் லிட் நிறுவனத்துடன் நல்ல உறவினை மேம்படுத்தியுள்ளோம். இந்த நிறுவனம் சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் (SIDBI) பங்கீடு பெற்று செயல்படுகின்றது. ரெப்கோ வங்கியினர், தொழில் முனைவோர் மன்றம் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொண்டு

**தொழில் முனைவோர் மன்றத்தின் கலந்தாய்வு மாதாந்திர கூட்டங்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் நடத்தப்படுகின்றன!**

- வங்கி மற்றும் நிதி
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு
- ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகள் மற்றும்
- நடைமுறைகள்
- வரிகள்
- அரசின் கொள்கைகள் மற்றும் பொதுவான எதிர்பார்ப்புகள்
- பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மை
- இன்சூரன்ஸ்
- மனித உறவுகள்
- சரக்குப் போக்குவரத்து மற்றும் தொடர் அளிப்பு மேலாண்மை
- தரமேலாண்மை மற்றும் உற்பத்தி

உறுப்பினர்களின் தேவைகள் என்ன என்பதைப்பற்றி கலந்தாலோசனை செய்து வருகின்றனர்.

இதனால் புதிய தொழில் முனைவோர், ஏற்கனவே தொழிலில் உள்ளோர் என அனைவரும் பயனடைய வாய்ப்புகள் நிறைய உள்ளது. இதில் கிடைக்கும் வெற்றியைப் பொறுத்து வெளியூர்களில் கேம்ப் நடத்தவும் திட்டம் உள்ளது. இதில் ரெப்கோ வங்கியுடன், தொழில் முனைவோர் மன்றம் இணைந்து மற்ற மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவோருக்கு தேவையான நிதியுதவியினை வழங்க முயற்சிகள் மேற்க்கொள்ளப்படும். தொழில் முனைவோர் மன்றத்தின் முக்கியக் குறிக்கோள் SME சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பது தான் என்கின்றனர்.

**தொழில் முனைவோர் மன்றம் நடத்தும் கூட்டங்களில் முக்கிய தலைப்புகளாக விவாதிக்கப்படுபவை எவை?**

எங்களுடைய கலந்தாய்வு கூட்டங்களில் தனிமனித வளர்ச்சிக்குத் தேவையான தன்னம்பிக்கைக்கு முதலிடம் வழங்கப்பட்டு அதற்கான செயல்பாட்டு வழிமுறைகள் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படுகின்றது.

தொழிலுக்குத் தேவையான மார்கெட்டிங், மனிதவளம், வங்கி நிதியுதவியை பெறுவது எப்படி, திட்ட அறிக்கைகள் தயாரிப்பது எப்படி, ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைகள், தொழிலாளர் பிரச்சனை, இன்சூரன்ஸின் பயன்கள், இணைய வழி வணிகம் மற்றும் அரசு சிறு தொழில் துறையினருக்கு வழங்கும் மானியங்கள் போன்றவற்றை தலைப்புகளாகக் கொண்டு அந்தந்த துறை வல்லுனர்களைக் கொண்டு உறுப்பினர்களின் சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

தொழில் முனைவோரும், தொழில் முனைவோர் மன்றமும் இணைபிரியாத இரயில் தண்டவாளம் போன்றவர்கள் என்று கூறுவதில் தவறில்லை என்று நினைக்கின்றோம். காரணம் தொழில் என்னும் இரயில் ஓடுவதற்கு தண்டவாளம் மிகவும் அவசியமானதாகும். மேலும் தொழில் முனைவோர் தங்களது தினசரி வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், தர மேலாண்டை, நேர மேலாண்மை என பல்வேறு தலைப்புகளின் கீழ் உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது என்கின்றனர்.

**தமிழகத்தில் குறு, சிறு, நடுத்தர தொழில்களுக்கு உதவ பல்வேறு சங்கங்கள் உள்ள நிலையில், உங்களுடைய தொழில் முனைவோர் மன்றம் எப்படி அவர்களிடமிருந்து வேறுபடுகின்றது என்பதைப் பற்றி...**

தொழில்முனைவோர் மன்றம் SME என்னும் பெரிய சமுதாயத்தைப் பார்க்கின்றது. சிறுதொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு நாங்கள் துணை நிற்ப்போம். சிறு தொழில் நிறுவனங்கள், நிறுவனங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் பொறியியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் நாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். எங்களுடைய பணி மற்ற சங்கங்களைப் போல் வரையறுக்கப்பட்டதல்ல! அதாவது தயாரிக்கும் பொருள், குறிப்பிட்ட இடத்தைப் பொருத்ததல்ல!

எங்களுடைய பணிக்கு எல்லைகள் இல்லை. தமிழகம் மற்றும் அகில இந்திய அளவில் உள்ள SME சமுகத்தினரே எங்களின் இலக்கு.

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நாங்கள் மூவரும் ஆளாளுக்கு இரண்டு SME நிறுவனங்களை நடத்திக் கொண்டுதான் உள்ளோம்.

நாங்கள் கடந்து வந்த பாதையில் நிறைய தொழில் முனைவோர்கள் வருகின்றனர். அவர்கள் எங்களை விட வேகமாக கடந்து கரைசேர வேண்டும் என்ற கோணத்தில் செயல்படுகின்றோம்.

நாங்கள் யாரையும் (மற்ற சங்கங்கள்) எங்களுடன் ஒப்பிட்டு பார்ப்பது கிடையாது. இவ்வளவு ஏன்? தமிழகத்தில் நிறைய சங்கங்கள் இருக்கின்றன. இருந்தாலும் எங்களிடம் புதிய உறுப்பினர்களின்

**சட்டுபிட்டு தகவல்**

மனிதர்கள் இரண்டு பேர்வழி;
ஒருவன் இருளில்
விழித்திருக்கிறான், மற்றவன்
ஒளியில் தூங்குகிறான்.

## திரு. R.R. பத்மநாபன் அவர்களைப் பற்றி...

படிப்பு:

MBA வெளிநாட்டு வர்த்தகம் – பி.எஸ்.ஜி. கல்லூரி கோவை

B.L., - Dr. அம்பேத்கர் சட்டக்கல்லூரி, சென்னை.

அனுபவம்:

கடந்த 20 வருடங்களாக ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான பணிகளில் ஈடுபாடு

- சுங்கவரி, சேவை வரி, வெளிநாட்டு வர்த்தகம் பணியினை மேற்கொள்ளும் எக்ஸிம் கன்சல்டன்ட் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக பொறுப்பில் இருப்பது
- துணை திட்ட அலுவலராக யூனியன் மோட்டார் குழும நிறுவனத்தில் பணியில் இருந்த அனுபவம்.
- டூல்ரூம் பணிகளை செய்யும், மாருதி மெஷினரி தயாரிப்பு நிறுவனத்தின் மேலாண் இயக்குனராக இருந்த அனுபவம்.
- 1987–ல் இருந்து, இன்றுவரை ராமச்சந்திர ராவ் & சன்ஸ் என்ற சுங்க ஏஜெண்ட் நிறுவனத்தில் பங்குதாரராக இருப்பது.
- ஸ்ரீ பார்வர்டர்ஸ் (Forwarders) என்னும் லாஜிஸ்டிக் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக பொறுப்பில் இருப்பது
- தொழில் முனைவோர் மன்றத்தின் (The Entrepreneurs Club) அறங்காவலராக இருப்பது.
- கோவை ராமகிருஷ்ணா குழுமங்களின் நிறுவனர் திரு. SNR சின்னச்சாமி நாயுடு அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எழுதி, புத்தகமாய் வெளியிட்டது.
- 24 ஆன்மீக நூல்களை தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்தது.
- இலக்கியத்தில் ஆர்வம் கொண்டுள்ளது.

ஆர்வம்:

தொழில் முனைவோர் மன்றத்தின் சேவைகளை தமிழகம் மட்டுமின்றி அகில இந்திய அளவுக்கு விரிவுபடுத்துவது.

நோக்கம்:

தொழில் முனைவோர் மன்றத்தின் உறுப்பினர் களுக்கு தேவையான ஏற்றுமதி/இறக்குமதி நடைமுறைகளை தெளிவுபடுத்துவதில்.

## திரு. K. கங்காதரன் பற்றி...

படிப்பு:

M.Com., MBA., வணிகம் மற்றும் மேலாண்மையில் முதுநிலை பட்டம் – சென்னை பல்கலைக்கழகம்.

அனுபவம்:

கடந்த 17 வருடங்களாக தகவல் தொழில் நுட்பம், மனிதவள மேம்பாட்டுத்துறையில் ஈடுபாடு.

- 8 வருடங்கள் இந்தியாவின் முன்னணி கம்ப்யூட்டர் உதிரி பாக தயாரிப்பு நிறுவனத்தில் விற்பனை மற்றும் சந்தைப் பிரிவில் பணி.
- Maptech Info Soft Pvt. Ltd., மேப்டெக் இன்போ சாஃப்ட் நிறுவனத்தின் இணை இயக்குனராக பதவியில் இருப்பது
- கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியாவின் உறுப்பினர்.
- M/s. See Change Consulting நிறுவனத்தினை தொடங்கி திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து வருவது.
- தொழில் முனைவோர் மன்றத்தின் அறங்காவலராய் இருப்பது.

ஆர்வம்:

தொழில் முனைவோர் மன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான மனித வள மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சியின் மூலம் திறனை அதிகரிக்கச் செய்வது.

நோக்கம்:

இன்ஜீனியரிங் மற்றும் MBA மாணவர்களை தொழில் முனைவோர்களாக மாற்ற விரும்புவது.

## திரு. B. சீனிவாஸ் பற்றி...

படிப்பு:

வணிகவியல்

அனுபவம்:

கடந்த 20 வருடங்களாக கணினி மற்றும் இன்டர்நெட்டை பயன்படுத்தி தொழிலை விரிவாக்கம் செய்வதில் ஈடுபாடு.

- பிளான்ஸ், புரபோசல்ஸ், மற்றும் புராஜக்ட்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் பணியில் இருப்பது.
- PPP Infotech Ltd – நிறுவனத்தின் இயக்குனர் பதவியில் இருப்பது.
- PPP Research Foundation–ல் அறங்கா வலராக இருப்பது.
- இன்டர்நெட்டை ஆயிரக்கணக்கான சிறுதொழில் வணிகர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்த துணை புரிந்தது.
- சிறு மற்றும் குறுந்தொழில் (MSME) ஆலோசகர் (From Company Incorporation to liquidiation).
- சைவ சித்தாந்த நெறி மீது ஆர்வம் கொண்டுள்ளது.
- 'தெய்வமுரசு' ஆன்மீக மாத இதழின் பதிப்பாசிரியர்.
- மிகச்சிறந்த மேடைப் பேச்சாற்றலால் பலதரப்பட்ட மக்களையும் கவரும் ஆற்றல்
- தொழில் முனைவோர் மன்றத்தின் அறங்காவலராய் இருப்பது.

ஆர்வம்:

தொழில் முனைவோர் இன்டெர்நெட்டை பயன்படுத்தி தொழிலை வளமாக்கிக் கொள்ள உதவுவது

நோக்கம்:

TECZINE எனும் இணையதள பத்திரிகையை உருவாக்கி சிறு தொழில் மன்றத்தின் உறுப்பினர் களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது.

சேர்க்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுள்ளதே ஏன்? இதற்கு காரணம் நாங்கள் மற்றவர்களிடமிருந்து மிகவும் வேறுபட்டு நிற்கின்றோம். எப்படியெனில், உறுப்பினர்களுடன் தொடர்ந்து மாதம் இருமுறை கலந்தாய்வு நிகழ்ச்சிகள் மூலம் தொடர்பு கொள்கிறோம். இருமுறை கலந்தாய்வு என்பது மாதம் 6 முறை கூட எதிர்காலத்தில் ஆகலாம்.

தொழில் முனைவோர் மன்றம் என்பது மனமகிழ்ச்சி மன்றம் என்று நினைத்தால் அது மிகப் பெரிய தவறாகும். காரணம் எமது மன்றம் தொழில் முனைவோரின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு உதவும்.

இந்த மன்றம் தொடங்கப்படும் போது நாங்கள் இதை விளம்பரப்படுத்தவில்லை, தொடக்க விழாவிற்கு பெரிய VIP–யை அழைக்கவில்லை. எங்களது செயல்பாடுகள் அனைத்தும் அமைதிப்புரட்சியாக இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிக கவனமாக இருக்கின்றோம்.

மேலும், மாவட்ட வாரியாக எங்கள் தொழில் முனைவோர் மன்றக் கிளைகளைத் திறக்க எண்ணம் கொண்டுள்ளோம். மாவட்டங்களில் பொறுப்பேற்கும் நண்பர்களிடம் நாங்கள் எதிர்பார்க்கும் தகுதி என்னவென்றால், சமூக சிந்தனையுடன், மற்றவர்களுக்கு உதவும் எண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான்.

எனவே நாங்கள் மற்றவர்களை விட சேவையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணம் பூண்டு சிறப்பாக செயல்படுவதற்கான அனைத்து காரணிகளையும் கையாளுகின்றோம் என்கின்றனர்.

**தங்களுடைய தொழில் முனைவோர் மன்றத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?**

- நிறைய உள்ளன. முதலில் அதிக உறுப்பினர் சேர்க்கைக்கு வழி வகுப்பது. அடுத்த நிதியாண்டிற்குள் குறைந்த பட்சம் 300 உறுப்பினர்களை ஒருங்கிணைத்துக் கொள்வது. தற்போது நடத்தப்படும் கலந்தாய்வு கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது.
- TEC - The Entrepreneurs Club-லிருந்து Teczine என்ற இணையதள செய்தி இதழினை தொடங்க எண்ணம் கொண்டுள்ளோம். இதன் மூலம் உறுப்பினர்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களும் தெரிவிக்கப்படும். Teczine–ல் தொழில் முனைவோருக்கு பயன்படும்படியான பல்வேறு துறை சம்பந்தமான செய்திகள் கொடுக்கப்படும்.
- தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளுக்கும் தொழில் முனைவின் அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்து மாணவர்கள் தொழிலில் இறங்க துணை புரிவது.
- TECMATE என்னும் பத்திரிகையை (உறுப்பினர்களுக்கு மட்டும்) தொடங்கி அதில் உறுப்பினர்களின் விளபம்பரங்களை இலவசமாக வெளியிடவும் தீர்மானித்துள்ளோம். இதனால் உறுப்பினர்களுக்கு தேவையானவற்றை, உறுப்பினர்களுக்குள்ளேயே வாங்கிக் கொள்ள வழி செய்வது.

**“ அரசின் தொழிற் கொள்கை வரவேற்கப்பட வேண்டியது தான். காரணம் இதுநாள் வரை தொழில் நிறுவனங்களுக்கு எந்த Direction-னும் இல்லாமல் இருந்தது. தற்போது அரசு புதிய தொழிற்கொள்கையை அறிமுகப்படுத்தி சரியான பாதையை வகுத்துள்ளது. “**



திரு. **K.** கங்காதரன்

- துறைவாரியாக உறுப்பினர்கள் அதிகமாகும் போது அந்தந்த துறை வல்லுனர்களின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட குழுமத் தொழில் களின் வளர்ச்சிக்கு உதவுவது.
- வருடத்திற்கு 1 முறை பல்துறை உறுப்பினர்களை ஒருங்கிணைத்து கண்களும், கண்களும் சந்தித்து கொள்ளும் (eye to eye contact) நிகழ்வினை நடத்துவது என்று அவர்கள் மேலும் கூறுகையில்...

உலகிலேயே நம் நாட்டில் மட்டும் தான் கலாச்சாரத்திற்கும், அன்பு, பாசம் இவை களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படு கின்றது. எனவே நாம் அனைவரும் சமுதாய நோக்கம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சமுதாய நோக்கமே நம்மை மிக அதிக உயரத்திற்கு அழைத்துச் சென்று வெற்றி பெற துணைபுரியும். நம் அனைவருக்குள்ளும் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் எண்ணம் வளர வேண்டும். செடி மரமாகி, கனிகளையும், நிழலையும் கொடுப்பது போல் தான் நம் வாழ்வும் இருக்க வேண்டும்.

வருகின்ற எதிர்கால சமுதாயத்திற்கு நாம் சங்கடங்கள் கொடுக்காமல், அவர்களின் வளர்ச்சிக்கு அடிகோலிட வேண்டும்.

திரு. அப்துல்கலாம் அவர்கள் கூறியபடி 2020–ல் நாம் வல்லரசாக வேண்டும் என்பதை ஒவ்வொரு இந்தியரும் தம் மனதில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும். இதற்காக நாம் புதிய இளம் சமுதாயத்தினரை தொழில் முனைவோராக்கிட முயற்சிக்க வேண்டும் என்பதை தொழில் முனைவோர் மன்றம் நன்குணர்ந்து இந்தியாவின் வளர்ச்சிக்கு தூண்டுகோலான SME துறையினரை ஒருங்கிணைத்து, அவர்களின் வாழ்வு சிறக்கவும், நாட்டில் புதிய தொழில் முனைவோர் உருவாகவும் தன்னுடைய முழு முயற்சியினை தொடர்ந்து செய்யும் என்று நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றனர்.

தொழில் நேசனும், இவர்களின் நோக்கம் வெற்றி பெற துணைபுரியும் என்று உறுதியளித்து, வாழ்த்துகளை தெரிவித்து விட்டு கிளம்பினோம்.

மேலும் விபரங்களுக்கு:

தொழில் முனைவோர் மன்றம்
மூன்றாவது மாடி, ரேஸ் வியூ டவர்ஸ்
71/32E, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை – 600 032.
போன் : 044–43534221
மின்னஞ்சல் : info@tecindia.in
இணையதளம் : www.tecindia.in

– சந்திப்பு: ரேபா

## Canara Bank Officers' Association Welfare News

Canara Bank Officers Association, the recognised Association representing more than 13,000 Officers in Canara Bank and an affiliate of the All Inda Bank Officers' Confedertion, representing more than 2,00,000 Officers in the Banking Industry in India, is held its XIV Biennial Conference at Chennai between 22nd and 24th November 2007. Over 1,200 delegates from the length and breadth of the country participated in the Conference deliberated on-

- The Challenges before the workforce in the banking industry in the light of the changing economic technology & competitive environment in the country.
- The actions to be taken for reorienting the efforts to achieve higher economic growth and ensuring financial inclusion of the vast mass of the country.
- Rededication to achieve social and economic upliftment of the fellow countrymen.
- Salary revision, tax on perquisites, second option for pension, recruitment to match with the growing needs / expansion, regulated working hours, transfer compensation, frauds affecting the bank and staff welfare measures are some of the issues to be discussed in the meeting.
- The Conference was of greater importance in the light of the Charter of Demands presented for Bipartite discussion at industry level and the agitational programmes announced by United Forum of Bank Unions commencing from 20th Nov 2007.

Canara Bank officers 'Association has been very active for about 40 years in the welfare of the Bank Officers and has always contributed to the society through various social activities. It is not affiliated to any political party and functions in a total democratic setup.

The Conference was inuagurated by the Chairman of Indian Banks 'Association who is also the CMD of Canara Bank, Shri M B N Rao. The Key Note Address was delivered by Dr S Kannaiyan, Chairman, National Biodiversity Authority, Chennai. Other dignitaries from various fields like banking, economic and trade union shared their thoughts with the delegates.

Elaborate arrangements for the Conference were organized by Shri G V Manimaran, Joint General Secretary, Chennai and Shri V. Baburam, Chairman, Reception Committee.